தமிழ்ச் சிட்டு

அம்பேத்கர் வாழ்க!

தாம்பட்ட இழிவும் துன்பும்
தம்மக்கள் படக்கூ டாதென்
றேம்பிய ஒழுக்கம், கல்வி,
உயர்பணி, பதவி பெற்று
மேம்பட்ட அறிவுத் தொண்டால்
மிகப்பயன் தந்தே, மக்கள்
தேம்புற மறையா நின்றார்,
திகழ்அம்பேத் கராம்நல் மேதை!

உலகப்பே ரறிஞர்க் குள்ளே
உலவிய பெரும்பே ராற்றல்!
நிலவிய இழிவு, தாழ்ச்சி
நீங்கிட உழைத்தே, இந்த
நிலவுல குள்ள காலம்
நிலைத்திடும் புகழைப் பெற்றார்!
வலவராம் அவர்நூற் றாண்டில்
வாழ்த்துவோம் நன்றி கூறி!

(உள்ளே: அம்பேத்கர் வரலாற்றுச் சுருக்கம்!)

குரல் : 21
இசை: 5

விலை:
உருபா : 1-00

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

தெரிந்து கொள்ளுங்கள்

- உலகில் ஏறத்தாழ 40 கோடிப் பேர் வெற்றிலை பாக்குப் போடும் பழக்கம் உடையவர்களாக உள்ளனர்.
- இந்தியாவில் உள்ள மொத்த மக்கள் தொகையில் (ஏறத்தாழ 80 கோடி) 50 கோடிப் பேர் புலால் உண்ணுகிறவர்கள். எனவே இறைச்சிகளுக்காக நாட்டில் ஒவ்வொரு நாளும் ஏறத்தாழ 36 இலக்கம் உயிரினங்கள் (ஆடு, மாடு, கோழி முதலியவை) ஆண்டுக்கு 13 கோடி உயிரினங்கள் வெட்டப் படுகின்றன என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.
- இந்தியாவில் ஏறத்தாழ ஒன்றரைக்கோடி மாட்டுவண்டிகள் உள்ளனவாம்.
- இந்தியாவில் உள்ள மக்களில் 70 விழுக்காட்டினர் (ஏறத்தாழ 56 கோடிப் பேர்) வேளாண்மை செய்கின்றனர்.
- மாந்தனின் மூக்கு ஏறத்தாழ பத்தாயிரம் மணங்களை வேறு- பட்டு அறியும் திறன் படைத்தது.
- தமிழ்த் திரைப்படம் தொடங்கி (காளிதாசு என்ற பேசும் படம் முதல், கிளிஞ்சல்கள் என்ற திரைப்படம் வரை) தமிழில் இதுவரை வெளியான திரைப்படங்கள் 2020 என்று கணக்குச் சொல்லுகிறார்கள்.
- தமிழ்நாட்டில் மொத்தம் 12,616 ஊராட்சி மன்றங்கள், 98 நகராட்சி மன்றங்கள் உள்ளன.
- இசுலாமிய ஆண்டு 'ஹிஜ்ரி' என அழைக்கப்படுகிறது. 'ஹிஜ்ரத்' எனும் சொல்வழிப் பிறந்தது 'ஹிஜ்ரி'. 'ஹிஜ்ரத்' என்னும் சொல்லுக்கு 'இடம் பெயர்ந்து செல்லுதல்' என்பது பொருளாகும். முகம்மது நபி, மக்கா குறைஷிகளின் கொடுமைகளிலிருந்து தப்பிக்கத் தம் தோழர்களுடன் மதினா நகர் நோக்கிப் பெயர்ந்து சென்ற நிகழ்ச்சியே 'ஹிஜ்ரத்' என்பதாகும். அவர் அவ்வாறு மக்காவிலிருந்து இடம் பெயர்ந்த நாளை அடிப்படையாகக் கொண்டே 'ஹிஜ்ரி' என்னும் இசுலாமிய ஆண்டு கணக்கிடப் பெறுகிறது.
- ஒரு காலத்தில் கால் நடைகள் சொத்துகளாக மதிக்கப் பெற்றனர். பெண்கள் சொத்துகளாக இருந்தனர்; அடிமைகள் சொத்தாக இருந்தனர். விலங்குகளில் யானை, ஒட்டகம், குதிரை, குரங்கு யாவும் சொத்தாயின. பிறகு சுரங்கங்கள், பொன், வெள்ளி, செப்பு, இரும்பு யாவும் சொத்தாயின. பிறகு மண்ணெய் சொத்தானது. அணுப்பிளவுக்குப் பின் அணுவீச்சுப் பொருள்கள் சொத்துகளாயின.
- இந்தியாவில் உள்ள மக்கள் தொகையில் 100க்கு 80 பேர் சிற்றூர்ப் புறங்களில்தான் வாழுகிறார்கள்.
- இந்தியாவில் உள்ள விளைச்சல் நிலத்தில் 46 விழுக்காடு, மொத்த மக்கள் தொகையில் 5 விழுக்காட்டு நில முதலாளிகளிடமும், இந்தியாவின் பொருளியலில் ஏறத்தாழ 18 ஆயிரம் கோடி உருபா 75 குடும்பங்களிடமும் உள்ளன.
- இந்தியாவில் 26.4 கோடி எக்டர் நிலம் தான் வேளாண்மைக்கு உகந்ததாக உள்ளது. (ஒரு எக்டர் (Hectare) நிலம் என்பது 2.471 – ஏறத்தாழ $2\frac{1}{2}$) குறுக்கம் (ஏக்கர்) கொண்ட பரப்பு.)

(தொடர்ச்சி அட்டை 3 ஆம் பக்கம்)

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலையிதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்: 21] (தி.பி-2022) சுற-மீன் (சன-மார் '91') [இசை-5]

கொடுத்துச் செய்வதும், எடுத்துச் செய்வதும்!

'ஏவா மக்கள் மூவா மருந்து'— என்பது ஔவையார் வாய்மொழி! 'இதைச் செய்' என்று சொல்லாத முன்பே, மனக் குறிப்பறிந்து செய்கின்ற திறமுடையவர்கள், சொல்ல வேண்டியவர்க்கு முதுமை எய்தாமல் காக்கும் மருந்தைப் போன்றவர்கள், என்பது இதன் பொருள்.

எந்த ஒரு செயலையும் சொல்லிச் செய்வது, அவ்வளவு திறனுடைமை அன்று. 'சொல்லாமலே பெரியர்; சொல்லிச் (செய்வார்) சிறியர்; சொல்லியும் செய்யார் கயவர்' என்பதும் இன்னொரு முதுமொழி!

செயல் செய்வதற்குச் செய்திறன் வேண்டும். அச்செயலை இன்னொருவர் சொல்லிச் செய்வது செய்பவருடைய திறமைக் குறைவையே காட்டும். சொல்பவருடைய மனக்குறிப்பை உணர்ந்து, தானே செயல்படுவது என்பது ஒருவருடைய தனித்திற குறிக்கும்.

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்.
ஆசிரியர்: மா. பொழிலன்.
தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. (தமிழகம்)

சொல்வதைச் சொன்னபடி செய்கின்ற திறமையே இக்காலத்தில் குறைவுபட்டு வருகிறது. இந்நிலையில் சொல்லாது முன்பே குறிப்பறிந்து செய்வது என்பது மிக மிக அரிது! எங்காவது ஆயிரத்தில் ஒருவர், பத்தாயிரத்தில் ஒருவர், அல்லது இலக்கத்தில் ஒருவர் என்று இருக்கலாம். ஒன்றைச் சொல்லாமல் செய்வதற்கு அறிவுக் கூர்மையுடன் மனத்திறனும் சேர்ந்து செயல்படுதல் வேண்டும்.

'யாண்டு பலவாக நரையில் வாகுதல்' என்று தொடரும் புறநானூற்றுப் பாடலில் (191) புலவர் தமக்கு நரை (முதுமை) ஏற்படாமல் இருப்பதற்குத் தம்முடைய மனைவியும், மக்களும் மாண்புடையவர்களாக இருப்பதுடன், அவரிடம் உள்ள பணியாளர்கள் அனைவரும், அவரின் மனக்குறிப்பை அறிந்து செய்யும் திறன் பெற்றவர்களாக இருந்தார்கள், 'யான் கண்டனையர் என் இளையரும்' என்பதையும் ஒரு காரணமாகச் சொல்லுகிறார். தாம் எண்ணுவதைச் செயலில் காட்டும் மகன் (மனம் போல வந்த மகன்-புறப் பொருள்:26) தந்தையின் வாழ்நாள் நீட்டிப்புக்குக் காரணமாக அமைவான் என்பது, உடலியல், மனவியல் அடிப்படையிலான உண்மை!

சொல்லிச் செய்வதை அஃதாவது கொடுத்துச் செய்வதை விட சொல்லாமலே செய்வது அஃதாவது எடுத்துச் செய்வது எல்லாவற்றினும் மேலானதாகும்.

இதைச் செய், அதைச் செய் என்று ஒருவரிடம் செயல் ஒன்றைக் கொடுத்துச் செய்வது, கொடுப்பவர்க்கும் செய்பவர்க்கும் சலிப்பை ஊட்டுவதாகும்; பிணக்கத்தை உருவாக்குவதாகும். சொல்பவர் குறிப்பை உணர்ந்து, தாமே அப்பணியை எடுத்துச் செய்வது, அஃதாவது தாமே விரும்பி ஏற்றுக் கொண்டு செய்வது, அப்பணியை அமைப்பவர்க்கும், அதை மேற்கொள்பவர்க்கும் மகிழ்ச்சியைத் தருவது ஆகும்; மேலும் இணக்கத்தை உருவாக்குவதும் ஆகும்.

இவ் விடத்து, ஓர் அரிய திருக்குறளையும் நினைவு கூர்வது, இக்கருத்தினை மேலும் வலிவும் பொலிவும் உடையதாக்கும்.

> செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
> உள்ளறிவான் உள்ளம் கொளல் —(677)

அஃதாவது, செய்ய வேண்டிய ஒரு செயலைச் செய்ய முற்பட்டவனுடைய செயல் முறையானது, (எவ்வாறு இருத்தல் வேண்டும் என்றால்), அச் செயலை முன்னரே அறிந்து செய்முறைத் திருத்தம் பெற்றவனுடைய உள்ளத்தில் இருக்கின்ற செயல் வடிவ உணர்வை அறிந்து செய்தது போல், அஃதாவது, அவன் ஏற்கனவே கண்டும் செய்தும் பட்டறிந்தும் பெற்ற செயல் அடைவை ஒத்ததுபோல், இருத்தல் வேண்டும்' என்பார் திருவள்ளுவப் பேராசிரியர்.

ஒரு செயலைச் செய்பவன், அச் செயலுக்குரியவனை ஏவுவானுடைய மனக்கருத்துக்கு ஒப்பச் செயல் பட வேண்டும்

என்பதில் ஒரு தவறான கண்ணோட்டத்திற்கு இடம் உண்டாவதையும் இவ்விடத்தில் எண்ணிப் பார்ப்பது, ஒரு பொருள் முரணைத்தவிர்க்க உதவும்.

செய்வது செயல். செயலைச் செய்பவர் செயலாளர்; அஃதாவது தொழிலைச் செய்பவர் தொழிலாளி. எனவே, தொழிலாளி ஒருவருடைய தொழில் திறமையை முதலாளிக்குச் சார்பாக ஆக்குவதற்கு இக்கருத்து ஒருவகையில் உதவுவது போல் தோன்றலாம். எனவேதான், இக்கருத்தில் ஒரு முரண்படு பொருள் தெரிவதுபோல் இருக்கும்.

ஆனால், தொழிலாளிக்கு அவரது சார்பு நிலை எவ்வாறிருப்பினும் அது மாற்றிக் கொள்வதற்கு உரியது. தொழில் சார்பு நிலைகள் மாறலாம். ஆனால், தொழில் செய்பவர் தம் தொழில் திறனை வளர்த்துக் கொள்ளும் நோக்கிலேயே இக் கருத்தை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

தொழில் திறமையுடையவர்கள் அஃதாவது செயல் திறமையுடையவர்கள் யாவரும் ஒருவரல்லர். செயல் திறமையுடையவர்களுக்கு எவ்விடத்திலும் எப்பொழுதும் மதிப்பிருக்கும்; வரவேற்பும் இருக்கும். எனவே தொழில் திறமைகளுள் அஃதாவது செயல் திறமைகளுள், சிறந்த திறமை தான் கொடுத்துச் செய்யாமை; எடுத்துச் செய்கின்றமை; சொல்லிச் செய்யாமை; சொல்லாமலே குறிப்பறிந்து செய்கின்றமை.

எனவே இச் சிறப்புத்திறன், தொழிலாளரைத் தாழ்த்துவதன்று; அடிமைப் படுத்துவதும் அன்று; மனவியல் அளவில் இஃதொரு வளர்ச்சி, இவ்வளர்ச்சி தொழில், அல்லது செயலுக்கு ஊக்கமளிப்பது; உதவுவது; அதைப் பெருமைப்படுத்துவது; பயனடையச் செய்வது. எனவே செயல் திறமைகளில் தலையாயது தானே உணர்ந்து செய்வது. கேட்டோ, சொல்லியோ செய்வதன்று. சொல்லிச் சொல்லியும் கேட்டுக் கேட்டும் செய்வது செயல் திறம் ஆகாது. இத்தகைய திறம் உடையவர்களுக்கு என்றும் தாழ்ச்சியும் இல்லை; வீழ்ச்சியும் இல்லை என்று உணர்தல் வேண்டும்! O

அன்பர்களுக்கு ஓர் அறிவிப்பு!

அச்சகப் பணியாளர்கள் குறைவாலும், பெரும்பாலான மூகவர்களின் மிகுதியான நிலுவையாலும், அடிக்கடி நிகழும் ஆசிரியரின் வெளியூர் நிகழ்ச்சிகளாலும், முறையான விற்பனைக்கு முன்னரே தடைகள் வந்ததாலும், கடந்த இரண்டு மூன்று மாதங்களாக ஆசிரியரே பொறி இயக்கம் செய்து அச்சிட வேண்டியிருப்பதாலும் இதழ்கள் காலந்தாழ்ந்தே வெளிவர வேண்டி உள்ளன. இந்நிலையைத் தவிர்க்கவே இயலவில்லை. ஆனால் இதழ்கள் எப்படியும் தட்டுத் தடுமாறியேனும் வந்தே தீரும். அன்பர்கள் பொறுத்துக் கொண்டு, இத் தவிர்க்க இயலாத தண்டமிழ்ப் பணிக்குத் துணை நிற்கக் கேட்டுக் கொள்கிறோம்,

— அமைச்சர்.

சில மருத்துவக் குறிப்புகள்!

○ மலச்சிக்கல் உள்ளவர்கள் அதைப் போக்கிக் கொள்ள எளிய உடற்பயிற்சி ஒன்று உள்ளது. இடுப்பில் கைகளை வைத்துக் கொண்டு, ஒரு காலில் நின்று, மற்றொரு காலை மிதிவண்டி ஓட்டுவது போல நூறுமுறை சுழற்ற வேண்டும். பின்னர் அடுத்த காலை ஊன்றிக் கொண்டு மற்ற காலையும் அவ்வாறே சுழற்ற வேண்டும். அல்லது படுக்கையை விட்டு எழுமுன் ஒவ்வொரு நாள் காலையிலும், மல்லாந்து படுத்தவாறே இரண்டு கால்களையும் மிதிவண்டி ஓட்டுவதுபோல் நூறுமுறை சுழற்றிவிட்டு எழுந்ததும் ஒரு குவளை அல்லது இரு குவளை நீர் அருந்த வேண்டும். இவ்வாறு நாள்தோறும் செய்து வந்தால் மலச்சிக்கலே வராது. வந்தாலும் நீங்கி விடும்.

○ வயிற்றில் வலி ஏற்பட்டால் கொதிக்கும் நீரில் ஒரு தேக்கரண்டி தேன் விட்டு நன்றாகக் கலக்கிக் குடிக்கவும். வயிற்று வலி 10 நிமையங்களில் குணமாகி விடும்.

○ நான்கு பேரீச்சம்பழத்தைக் கொட்டை நீக்கி நறுக்கி, ஓர் ஏனத்தில் போட்டு, அவை நனையும் வரை தண்ணீர் விட்டு, நான்கு மணி நேரம் ஊற வைத்துப், பிறகு கடித்துச் சாப்பிட்டால் ஆடிக் கொண்டிருக்கிற பற்கள் கூட கெட்டிப் பட்டு விடும். முழுக் குணத்திற்கு நான்கு ஐந்து நாள்கள் தொடர்ந்து சாப்பிடவும்.

○ நகச்சுற்று வந்தால், கை பொறுக்குமளவுக்குச் சூடுள்ள தண்ணீரில் விரலை 5 அல்லது 10 மணித்துளி நேரம் வைத்து எடுக்கவும். அல்லது 'டர்பன்டைன்' என்னும் மரநெய்யைச் சிறிது சூடு பண்ணி அதில் விரலைத் தோய்த்து 10 மணித்துளி வைத்து எடுக்கவும். இவ்வாறு ஒரு நாளைக்கு மூன்று நான்கு முறை செய்யவும். அல்லது 'டர்பன்டைன்' நெய்யுடன் சிறிது உப்பு சேர்த்து விரலில் வைத்துக் கட்டவும்.

○ தூதுவளைப் பூக்களைப் பத்துக்குக் குறையாமல் எடுத்துப் பாலில் இட்டுக் காய்ச்சிச் சீனிக் கற்கண்டு தூள் சேர்த்துப் படுக்கைக்கு முன் உடல் நிலைக்கேற்ப 40 முதல் 60 நாள்கள் வரை சாப்பிட்டு வந்தால் இல்வாழ்க்கைத் தொடர்பான உடல் குறைபாடுகள் அனைத்தும் நீங்கும்.

○ தாய்ப்பால் வேண்டாம் என்று கருதுகிற பெண்கள், மல்லிகைப் பூவை மார்பில் வைத்துக் கட்டிக் கொண்டால் இரண்டு மூன்று நாளில் பால் வற்றி விடும். நாள் தோறும் இரவில் பூக்களை மாற்றிக் கட்டிக் கொள்ளுதல் வேண்டும்.

இப்பூக்களை அரைத்து, ஆண்கள் தங்கள் குறிகளின் மீது இரவு படுக்கைக்குப் போகும் பொழுது பூசியோ அல்லது முழுப் பூக்களை வைத்து கட்டியோ வந்தால் ஆண்மை பெருகும்.

○ மல்லிகை இலைகளை வாயிலிட்டு மென்று சிறிது நேரம் வைத்திருந்து துப்பி வர வாய்ப் புண்கள் விரைவில் குணமாகும்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

மின்சாரம் தொடர்பான சில விளக்கங்கள்!

பெரும்பாலும் மின்சாரத்தைப் பயன்படுத்தாத பகுதியே இக்காலத்தில் இல்லை என்று கூறி விடலாம். இந்த மின்சாரத்தைப் பற்றிய சில அடிப்படைகளை நாம் எல்லாரும் அறிந்திருத்தல் வேண்டும். ஓல்ட் (Volt), வாட் (Watt), ஆம்பியர் (Ampere) ஓம் (ohm) என்றெல்லாம் குறிப்பிடுவதன் பொருள்கள் என்ன?

மின்சாரம் என்பது ஒருவகை ஆற்றல் என்பதை நாம் அறிவோம். அம் மின்னாற்றல் கம்பிகள் மூலம் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குப் பாய்ந்து செல்லுவதையும் நாம் அறிவோம். மாழைகள் (உலோகங்கள்), கரிப்பொருள்கள் (Carbon) போன்றவை மூலம் மின்சாரம் பாயும். எனவே இவை மின்கடத்திகள் (Conductors) எனப்பெறும். தொய்வம் (Rubber) காய்ந்த மரம், காக்கைப் பொன் (Mica) போன்ற பொருள்கள் மூலம் மின்சாரம் பாயாது. எனவே இவற்றை மின் கடத்தாப் பொருள்கள் (non-conductors) என்பர்.

மின்சாரத்தில் நேர் மின்சாரம், எதிர்மின்சாரம் என இருவகை உண்டு. மின் கடத்தியில் ஒரே திசையில் ஓடும் மின்சாரம் நேர் மின்சாரம் ஆகும். ஆனால் எதிர் மின்சாரம் இரு திசைகளிலும் மாறி மாறி ஓடும். இவ்வாறு எதிர் எதிர் திசைகளில் மாறி மாறி ஓடுவது, மிக விரைவாக நிகழுமாதலால் திசை மாற்றத்தை நாம் உணர முடியாது. கைவிளக்கு மின்கட்டை, உந்து வண்டி மின்பெட்டி ஆகியவற்றில் வெளிவருவது நேர் மின்சாரம் ஆகும். வீடுகளில் நாம் பயன்படுத்துவது எதிர் மின்சாரம். இது நொடிக்கு ஐம்பது முறை எதிரெதிர் திசைகளில் ஓடுகிறது.

மின்சாரப் பயன்படுத்தத்தில் சில அளவீடுகளை நாம் வைத்திருக்கிறோம். மின் அழுத்தம், மின் ஓட்டம், மின்தடை, மின்ஆற்றல் ஆகியவை மின்சாரப் பயன்படுத்தத்தில் உள்ள வேறு வேறு நிலைகள். இவை முறையே ஓல்ட், ஆம்பியர், ஓம், வாட் என்னும் அலகுகளால் கணக்கிடப் பெறுகின்றன. இவற்றின் பொருள் விளக்கங்களைப் பார்க்கலாம்.

ஓர் ஏனத்தில் நிறைய தண்ணீர் இருக்கிறது; ஏனத்தின் ஒரு பக்கத்தில் ஒரு துளையிட்டால் தண்ணீர் வெளியே வருகிறது; ஏன்?

(முன் பக்கத் தொடர்ச்சி)

○ தூதுவளைக் கீரை உடலுக்கு மிக நல்லது. இக் கீரையினை எடுத்து நெய்யில் வதக்கி உப்பு, புளி, மிளகாய் சேர்த்துத் துவையலாகச் செய்து சாப்பிட்டு வந்தால் உடலுக்கு இளமையும், வனப்பும் கிடைக்கும். இதன் வேர், கொடி, இலை, பூ, காய் ஆகியவற்றை ஒரு பிடி எடுத்து ஒரு மண்பாண்டத்தில் இட்டு நீர் விட்டு நான்கில் ஒரு பகுதியாகச் சுண்ட வைத்து, அந்த நீரை வடித்து, 5 தேக்கரண்டி தேன் சேர்த்து ஒரு நாளைக்கு 2,3 வேளை கொடுத்து வந்தால், சளி, இருமல் அறவே நீங்கும்; ஈளை நீங்கும்;

உள் பக்கம் தண்ணீரின் அழுத்தம் அதிகமாக இருப்பதால், அழுத்தம் குறைவாக உள்ள வெளிப்பக்கம் நோக்கித் தண்ணீர் பாய்கிறது. இதே போல் மின் அழுத்தம் அதிகமாக உள்ள பகுதியிலிருந்து (மின் கடத்தி மூலம்) மின் அழுத்தம் குறைவாக உள்ள பகுதியை நோக்கி மின்சாரம் பாயும். இந்த மின் அழுத்தத்தைத்தான் நாம் 'ஓல்ட்' என்னும் அலகினால் கணக்கிடுகிறோம்.

மேலே கூறிய ஏனத்தில் தண்ணீரின் அழுத்தம் அதிகமாக்கப்பட்டாலும், அல்லது தண்ணீர் துளை பெரியதாக்கப்பட்டாலும் தண்ணீர் மேலும் வேகமாக வெளியேறும். இதே போல் மின் அழுத்தம் ஒரு புள்ளியில் அதிகமாக்கப் பட்டாலும் அல்லது மின் கடத்தியை மேலும் அதிகமாகக் கடத்தும் தன்மை உடையதாகச் செய்தாலும் (எடுத்துக் காட்டாகப் பருமனை அதிகரித்தல்) மின் கடத்தியில் மின்சாரம் மேலும் வேகமாகப் பாயும். இந்த மின் ஓட்டத்தைத்தான் நாம் ஆம்பியர் என்னும் அலகினால் கணக்கிடுகிறோம்.

மேலே விளக்கிய ஏனத்தில் அதே அமைப்பில் துளை பெரியதாக இருந்தால் தண்ணீர் எளிதாக வெளியில் பாயும். துளையின் அளவைச் சிறிதாக்கினால் தண்ணீர் எளிதாகப் பாய்வதற்கு ஓரளவு தடை ஏற்படும். இதேபோல் மின்சாரம் பாயும் கடத்தியின் தன்மை மாறும் போது (எடுத்துக் காட்டாகப் பருமன் குறைக்கப் பட்டால்) மின் ஓட்டத்திற்குத் தடை ஏற்படும். இந்த மின் தடையைத்தான் ஓம் என்னும் அலகினால் கணக்கிடுகின்றோம்.

மின் அழுத்தம், மின்னோட்டம், மின் தடை இம்மூன்றிற்கும் உள்ள தொடர்பு

$$\text{மின் ஓட்டம்} = \frac{\text{மின் அழுத்தம்}}{\text{மின் தடை}}$$

—என்னும் சமன்பாட்டினால் விளக்கப் பெறுகிறது. இச் சமன்பாட்டின் மூலம் நாம் அறிவதென்ன? மின்னோட்டம் அதிகமாக ஆகவேண்டும்; அல்லது மின் தடை குறைய வேண்டும். மின் தடை அதிகமானால், மின்ஓட்டம் குறையும். மின் அழுத்தம் குறைந்தாலும் மின்னோட்டம் குறையும். சுருக்கமாகக் கூறுவதெனில், மின்ஓட்டமும் மின் அழுத்தமும் நேர் விழுக்காட்டுப் பொருத்தம் உள்ளவை. மின் ஓட்டமும் மின் தடையும் எதிர் விழுக்காட்டுப் பொருத்தம் உள்ளவை. இந் நெறி 'ஓமின்' என அழைக்கப் பெறுகின்றது.

எந்தவொரு மின்கருவியும் பயன்படுத்தும் மின்னாற்றலின் அளவை 'வாட்' என்னும் அலகினால் கணக்கிடுகின்றோம். மின்னழுத்தமாகிய ஓல்ட்டை, மின்னோட்டமாகிய ஆம்பியரால் பெருக்கினால் கிடைக்கும் மின்ஆற்றலின் அளவை 'வாட்' எனக் குறிப்பிடுகிறோம். (ஒரு 'வாட்' என்பதை ஒளி அளவாகச் சொன்னால் அஃது ஒரு மெழுகுத்திரியால் கிடைக்கும் ஒளியினது அளவாகும். 20 'வாட்'டுகள் என்பது 20 மெழுகுத்திரிகளிலிருந்து கிடைக்கும் ஒளி அளவு ஆகும்.)

இனி, நூறு 'வாட்சு' (Watts) மின் குமிழ் (Bulb) ஒரு மணி நேரம் எரிந்தால், அது நூறு 'வாட்சு' மின்னாற்றலைச் செலவழிக்-

கிறது. அதுவே பத்து மணி நேரம் எரிந்தால் ஆயிரம் 'வாட்சு' மின்னாற்றல் செலவாகும் ஓர் இருபத்தைந்து 'வாட்சு' குமிழ் நாற்பது மணி நேரம் எரிந்தால்தான் ஆயிரம் 'வாட்சு' மின்னாற்றல் செலவாகும். இந்த ஆயிரம் வாட்சுதான் ஒரு 'கிலோவாட்' அல்லது ஒரு 'யூனிட்' (அளவி) என அழைக்கப் பெறுகிறது. ஒரு மாதத்திற்கு வீட்டுப் பயன்படுத்தத்திற்கு உள்ள எல்லா மின்கருவிகள் மூலமாகவும் எத்தனை அளவி (யூனிட்) மின்னாற்றல் செலவாகியுள்ளதென்பதை வீட்டில் அமைக்கப்பட்டுள்ள அளவிமானி (Meter) காண்பிக்கிறது. அதன் அடிப்படையிலேயே நாம் மின்கட்டணம் செலுத்துகிறோம்.

இனி, மின்குமிழ் எவ்வாறு எரிய வைக்கப் பெறுகிறது என்பதைப் பார்ப்போம்.

ஒரு மெல்லிய கம்பியில் மின்சாரம் செலுத்தப்பட்டால், அக்கம்பி மின்னோட்டத்திற்கு ஓரளவு தடையை ஏற்படுத்துகிறது. அக்கம்பியின் பருமன் மேலும் குறைக்கப்பட்டால், அல்லது கம்பியின் நீளம் அதிகமாக்கப்பட்டால், (அல்லது இரண்டையும் செய்தால்) அக்கம்பி மின்னோட்டத்திற்கு மேலும் அதிக அளவில் தடையை ஏற்படுத்தும். கம்பியில் தடை மிகவும் அதிகமாக ஆனால், அக்கம்பி சூடு அடைந்து, பழுக்கக் காய்ச்சிய இரும்பைப் போல் சிவக்கத் தொடங்கும். மேலும் தடையை அதிகப் படுத்தினால், அக்கம்பி சுடர்விடத் தொடங்கும். அதற்கு மேலும் தடையை அதிகரித்தால், அக்கம்பி மிகுந்த சூடு அடைவதன் விளைவாக, மிகச் சுடர்விட்டு ஒளி வீசத் தொடங்கும். இதன் அடிப்படையில்தான் மின்சாரக் குமிழ்கள் அமைக்கப் பெறுகின்றன.

மின்சாரக் குமிழுள் 'டங்ஸ்டன்' (Tungston) என்னும் மாழையி (உலோகத்தா)லான, நீளமான மிக மெல்லிய கம்பி சுருளாக்கப்பட்டு அமைக்கப் பெற்றுள்ளது. குமிழுள் செலுத்தப் பெறும் மின்சாரம், இக்கம்பி வழியாக ஓடும்போது அதிக அளவில் அக்கம்பி, மின்னோட்டத்திற்குத் தடை ஏற்படுத்துவதால், அதிக சூடு ஏற்பட்டுக் கம்பி ஒளி வீசுகிறது. 'டங்ஸ்டன்' மற்ற மாழைகளை விட மிக அதிகமான சூட்டுநிலை வரை உருகிவிடாமல் இருக்கும் தன்மை பெற்றுள்ளதால் குமிழில் 'டங்ஸ்டன்' இழை பயன்படுத்தப்படுகிறது.

'டங்ஸ்டன்' இழை காற்றில் எரிந்தால் சாம்பலாகி விடும். எனவே காற்று பெருமளவு நீக்கப்பட்ட குமிழினுள் 'டங்ஸ்டன்' இழை பொருத்தப் பெற்று, அதன் இரு முனைகள் மட்டும் சற்றுப் பருமனான கம்பியால் இணைக்கப்பட்டுக் குமிழிற்கு வெளியே கொண்டு வரப்படுகிறது. இக் கம்பிகள் மூலந்தான் மின்சாரம் செலுத்தப் பெறுகிறது. இருபத்தைந்து 'வாட்சு' குமிழில் உள்ளதைவிட நூறு 'வாட்சு' குமிழில் உள்ள 'டங்ஸ்டன்' இழை அதிக நீளமானதாகும். எனவே நூறு 'வாட்சு' குமிழ் மின்னோட்டத்திற்கு அதிகத் தடையை ஏற்படுத்தி அதிக ஒளி வீசுகிறது.

—கே. எசு. வேலுசுவாமி.

இனநலங் காக்க வேண்டும்!

-- அழகுநிலவன்.

நல்லதையே உன்மனம் நாடவேண்டும்—தமிழ்
நாட்டின் சிறப்பையே பாடவேண்டும்!
இல்லையெனக் கேட்போருக்(கு) உதவவேண்டும்—பிறர்
இன்னல் கண்டு உன்நெஞ்சங் கலங்கவேண்டும்!

நல்ல நல்ல நூல்களையே படிக்க வேண்டும்—நீ
நாள்தோறும் முன்னேறத் துடிக்கவேண்டும்!
சொல்லாலும் செயலாலும் உழைக்கவேண்டும்—நீ
சோம்பலையே நீக்கிவிட்டுத் தழைக்கவேண்டும்!
கற்றோரைத் துணையாகக் கொள்ளவேண்டும்—உன்
கண்களிலே என்றையுமே கனிவுவேண்டும்!
பெற்றோரை—பெரியோரை மதிக்கவேண்டும்—உன்
பேச்சினிலே தூயதமிழ் மணக்கவேண்டும்!

எண்ணத்தில் எப்போதும் தெளிவுவேண்டும்—நீ
இயற்கையினை மிகப்படித்து மகிழவேண்டும்!
உண்மையினை நீ, எடுத்துச் சொல்ல வேண்டும்—இந்த
உலகத்தின் போக்கினை நீ அறியவேண்டும்!

உடலினை நீ, நன்றாகப் பேணவேண்டும்—உன்
உள்ளத்தில் உயர்வினையே எண்ணவேண்டும்!
கடமையினில் நீ, சிறந்து விளங்கவேண்டும்—இக்
காலத்தின் அருமையினை உணரவேண்டும்!
உடையினை நீமுறையாக அணியவேண்டும்—நீ
ஊருக்கே உழைத்திடவும் துணியவேண்டும்!
தடைகளையே உடைத்தெறிந்து முனையவேண்டும்—நம்
தமிழினத்தின் முன்னேற்றம் காக்கவேண்டும்!

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

அரிய கருத்துரைகள் அடங்கிய கருவி நூல்! தமிழீழப் போராட்டத்தின் முழுவடிவமும், போராளிகளின் முயற்சிகளும், சிங்கள, இந்திய அரசியல் சூழ்ச்சிகளும் உள்ளடங்கிய அரிய நூல்!

தமிழீழம்

(போராளிகளும், போராட்ட முயற்சிகளும்)

1970 முதல் இதுவரை ஆசிரியர் தென்மொழி, தமிழ்நிலம் ஆகியவற்றில் அவ்வப்பொழுது எழுதிய அரிய கட்டுரைப் பாடல்களின் தொகுப்பு! ஏறத்தாழ 550 பக்கங்கள் கொண்டது!

55 உருபா மதிப்புள்ள நூல்! முழுத்தொகையும் முன்னதாக அனுப்பிப் பதிவு செய்து கொள்பவர்களுக்கு நூல் வெளி வந்தவுடன் இலவயப் பதிவஞ்சலில் அனுப்பிவைக்கப் பெறும். முன்பே உரு. 35/-விடுத்தவர்கள், மேலும் உரு. 20/-விடுக்கவும்.

அண்ணல் அம்பேத்கர் !

(வ. வேம்பையன்)

அமைப்பாளர், கல்பாக்கம் கலை அறிவியல் மன்றம்.

வாழ்க்கை ஒரு வரலாறு : மக்கள் பிறக்கிறார்கள்; வாழ்கிறார்கள் இறக்கிறார்கள். ஆனால் சிலர் வாழ்க்கை மட்டுமே வரலாறு ஆகிறது. ஏன்? அவர்களின் வாழ்வும் தொண்டும் மக்களுக்கும் நாட்டுக்கும் ஆக்கமும் ஊக்கமும் எழுச்சியும் ஏற்றமும் எக்காலத்திற்கும் ஏற்படுத்தி வருவதால் தான்.

இந்த இலக்கணத்திற்கு இலக்கியமாக, எடுத்துக் காட்டாக அண்ணல் அம்பேத்கர் வாழ்ந்து, தொண்டு செய்து, பழுத்துப் புகழ் பெற்றுள்ளார்.

பிறப்பு : மராட்டிய மாநிலம், இரத்தினகிரி மாவட்டம், அம்பாவதே சிற்றூரில் 14—4—1891 ஆம் நாள் தாழ்த்தப்பட்ட 'மகர்' வகுப்பில் அம்பேத்கர் பிறந்தார். தாய் பெயர் பீமாபாய்; தந்தை பெயர் ராம்சிசக்பால். இவர்களுக்குப் பதினான்காவது பிள்ளை அம்பேத்கர். பீமராவ் என்று பெயர் சூட்டினர்.

படிப்பு : தந்தை ராம்சிசக்பால் படையிலிருந்து ஓய்வு பெற்ற பின் பம்பாய்க்கு அருகில் உள்ள சதாரா என்ற இடத்தில் குடியேறினர். இங்கு பீமராவ் தொடக்கக் கல்வியை முடித்தார்.

1908இல்- முன்கலைக்கழகத் (மெட்ரிகுலேசன்) தேர்வில் வென்றார். பம்பாய் எல்பின்சுடன் கல்லூரியில் படித்து 1912- இல் க. இ. (B.A.)பட்டம் பெற்றார்.

பரோடா மன்னரின் உதவியால் அமெரிக்கா, இலண்டன், செர்மன் போன்ற அயல் நாடுகளுக்குச் சென்று, அரசியல், பொருளியல், குமுகாயவியல், மெய்யியல், அறிவியல், சட்டம் ஆகியவற்றில் உயர்கல்வி கற்றும் ஆராய்ச்சி செய்தும் க. மு., முனை. மெய்., முனை. அறி (இலண்); சட். மெய் (கொலம்பியா) வழக்கறிஞர். (M.A., Ph. D., D. Sc. (Lond.) LL. D. (Columbia), Bar-at-Law) என்ற பட்டங்களைத் தம் கடுமையான உழைப்பாலும் விடா முயற்சியாலும் பெற்று அறிவின் சிகரத்தை எட்டிப் பிடித்தார்.

பெயர் : பீமராவ் என்பது பெற்றோர் வைத்த பெயர். ராம்சி என்னும் தந்தை பெயரும் அம்பாவதே என்னும் ஊரின் பெயரும் சேர்ந்து பீமராவ் ராம்சி அம்பாவத்கர் என்று அவரது பெயர் பள்ளியில் பதிவாகியது. இப்பெயர் சுருக்கமாக பி. ஆர். அம்பேத்கர் என்று பின்னர் அழைக்கப் பெற்றது.

கதை, பாடல், கட்டுரை எழுதும் போது தம் புனை பெயரான அம்பேத்கர் என்ற பெயரில் எழுதி வந்தார். அம்பேத்கர் என்பது வெறும் பெயர் அன்று. இவரது பிறந்த இடமான அம்பேவாதே என்ற ஊரின் பெயர் தோன்றத் தம்மையும் அம்பேத்கர் என்று அழைத்துக் கொண்டார். இதுவே உண்மையான பெயர் வரலாறு ஆகும்.

பதவி : பம்பாய் சிடென்காம் கல்லூரியில் பொருளியல் பேராசிரியர், உயர்நெறிமன்ற வழக்கறிஞர், சட்டக் கல்லூரி முதல்வர், சட்டமேலவை உறுப்பினர், வைசிராய் ஆளுமைக்குழுவின் உறுப்பினர், தொழிலாளர் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர், அரசியல் அமைப்புக் குழுவின் தலைவர், சட்ட அமைச்சர் போன்ற உயர் பதவிகளை ஏற்று அப்பதவிகளுக்குப் பெருமை சேர்த்துள்ளார். பதவியைத் தம் கொள்கையைச் செயல் படுத்துவதற்குரிய ஒரு வாய்ப்பாகக் கருதினார்.

திருமணம் : இராமாபாய் என்பவரைத் தமது 17ஆம் அகவையில் அம்பேத்கர் திருமணம் செய்துகொண்டார். பம்பாய் நகர பைகுல்லா அங்காடியில் மீனும் காய்கறிகளும் விற்கும் ஒரு பெரிய கொட்டகையில் இரவில் திருமணம் நடந்தது. பொழுது விடிவதற்குள் திருமணம், விருந்து, வேடிக்கை எல்லாம் முடிந்தன.

பன்மொழி பயின்ற பண்பாளர் : அண்ணல் அம்பேத்கர், மராத்தி, ஆங்கிலம், சமசுகிருதம், பார்சி, இந்தி போன்ற பல மொழிகளிலும் புலவராகவும் அறிஞராகவும் திகழ்ந்தார்.

தாளி(பத்திரி)கை ஆசிரியர் : மூக் நாயக் (ஊமைகளின் தலைவன்). பகிசுகரித் பாரத் (ஒதுக்கப்பட்ட பாரதம்): இவை மாதம் இருமுறை மலரும் இதழ்கள். 'சனதா' கிழமை தோறும் பூக்கும் பூவிதழ் இவற்றின் மூலம் தம் எண்ணங்களைத் எடுத்துக் கூறி, எழுச்சியையும் விழிப்புணர்வையும் ஊட்டியுள்ளார்.

போராட்டம் பல கண்ட போர் மறவர் : சவுதார் குளத்தில் தண்ணீர் எடுக்கும் உரிமைப் போராட்டம், நாசிக்கோயில் நுழைவுப் போராட்டம், மனுதர்ம நூல் எரிப்புப் போராட்டம் போன்றவற்றை அறவழியிலும் அன்பு நெறியிலும் நடத்தி வரலாறு படைத்துள்ளார்.

பொத்தகம் பல எழுதிய புதுமை விரும்பி : பண்டைக் கால இந்திய வாணிபம், ஆங்கில ஆட்சியில் மாநிலப் பொருள் நிலை வளர்ச்சி. இந்தியாவில் சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும், உருபாவின் சிக்கல், தீண்டாதவர் யார்? சூத்திரர் யார்? சாதி ஒழிய வழி என்ன? இந்தியாவில் நடந்த புரட்சிகளும் எதிர்ப்புரட்சிகளும், பேராயமும் (காங்கிரசும்) காந்தியும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்தது என்ன? புத்த மதம், புத்தரும் அவருடைய கற்பிப்பு(போதனை)களும், புத்தமும் அவருடைய தம்மமும், புத்தரும் காரல் மார்க்சும்- போன்ற நூல்கள் எழுதி அறிவுலகத்திற்கு அளித்துள்ளார்.

நன்றியுணர்வு கொண்ட நல்லறிஞர் : பம்பாய் கல்லூரியில் படிக்கவும் அயல் நாடுகள் சென்று படித்துப் பட்டம் பெறவும் பொருளுதவியும் பிற உதவியும் செய்த பரோடா மன்னர் சயாசிராவ் கெய்க்வாட் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கு வகையில் 'ஆங்கில ஆட்சியில் மாநில பொருள் நிலை வளர்ச்சி' என்ற நூலைப் படையல் செய்துள்ளார்.

கழகம் அமைத்த குமுகாயத் தலைவர் : தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவையும், சமநிலைக் குமுகாயத்தை அமைக்கும் கொள்கையைப் பரப்ப 'சமாச சமாத சங்கமும்' அமைத்தார். தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி முன்னேற்றத்திற்காக 'மக்கள் கல்விக் கழகமும்', புத்த நெறியைப் பரப்ப 'இந்திய புத்த சங்கமும்' நிறுவி மறு மலர்ச்சிக்கு வழி கோலியுள்ளார்.

கட்சிகளை உருவாக்கிய கடும் உழைப்பாளி : ஒடுக்கப்பட்ட மக்கள் அரசியல், அதிகாரம் ஆட்சி ஆகியவற்றில் உரிமைகளைப் பெறுவதற்கு உரிமைத் தொழிலாளர் கட்சி, அனைத்து இந்திய தாழ்த்தப்பட்டோர் கூட்டமைப்பு, இந்தியக் குடியரசுக் கட்சி ஆகியவற்றை அமைத்து அரும்பாடுபட்டுள்ளார்.

தொழிலாளர் இனத்தின் தோழர் ; அவர் பதவியில் இருந்த போது இயற்றிய தொழிலாளர் சட்டங்களின் விளைவாகத் தொழிற்சாலைகளில் ஒரு நாளைக்கு எட்டு மணி நேர வேலை, வேலைப் பாதுகாப்பு, தொழிலாளர் பெற்றுவரும் பல உரிமைகள் ஆகியவற்றிற்கு வழி, வகை செய்து தொழிலாளர்களின் தலைவராக விளங்கியுள்ளார்.

உழவர்களின் நலம் நாடும் நண்பர் : நிலச் சீர்திருத்தம், நிலவுடைமை ஒழிப்பு, நில வரித் தண்டல், உழவர்களின் நலன் தொடர்பான போராட்டங்கள் நடத்தி உழவர்களின் வாழ்வில் பெரும் புரட்சி செய்து உழவர்களின் நலம் நாடும் உற்ற நண்பராகியுள்ளார்.

மகளிர் உரிமைக்கு உழைத்த மாந்தவுணர்வாளர் : இன்று மகளிர் பெற்றுள்ள சம உரிமை, சொத்தில் பங்கு, மணவிலக்கு உரிமை போன்றவற்றிற்கு இந்துச் சட்டத்தின் மூலம் வகை செய்தவர் அம்பேத்கர் அவர்களே; அதனால், பெண் உரிமைக் காவலர் என்று போற்றப்படுகிறார்.

இந்திய அரசியல் அமைப்பின் சிற்பி : இந்திய அரசியல் அமைப்புக்குழுவின் தலைவராகப் பொறுப்பு ஏற்று, சிறந்த முறையில் இந்திய அரசியல் அமைப்பை உருவாக்கித் தந்துள்ளார். குமுக நெறி, தீண்டாமை ஒழிப்பு, தொகுதி ஒதுக்கீடு, கல்வி வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு ஆகியவற்றிற்கு அரசியல் சட்டத்தில் வழி வகை செய்துள்ளார். இதனால் இவரை இந்திய அரசியல் அமைப்பின் சிற்பி என்று அனைவரும் அழைக்கின்றனர்.

ஒடுக்கப்பட்டோரின் உரிமைக் காவலர் : தாம் பெற்ற அறிவையும் ஆராய்ச்சியையும் பட்டங்களையும், ஏற்ற பதவிகளையும் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காகவே பயன்படுத்தியுள்ளார்.

சட்டமன்ற, நாடாளுமன்றத் தொகுதிகளில் தனித் தொகுதி ஒதுக்கீட்டுக்கு ஏற்பாடு செய்துள்ளார்; கல்வி, வேலை வாய்ப்பில் இடஒதுக்கீட்டுக்கு வழிவகை கண்டுள்ளார்;

அண்ணல் அம்பேத்கர் பிறந்த போது இருந்த நிலை : ஊரில் செத்த மாடுகளை எடுத்துச் சென்று பங்கிட்டு உண்ணுதல், தோல் பதனிடுதல், கொத்தடிமைத் தொழில் புரிதல், உழவுக் கூலிகளாக இருத்தல், ஊர்க்காவலர்களாக இருத்தல், மலம் எடுத்தல், தெரு பெருக்குதல் போன்ற வேலைகள் தாழ்த்தப்பட்ட மக்களின் தலை எழுத்தாக இருந்துள்ளன.

ஆண்களின் உயிரும் உழைப்பும் பெண்களின் கற்பும் குடும்ப வாழ்வும் மேல் சாதியார்க்கு மலிவுப் பொருள்களாக இருந்துள்ளன.

அரசுப் பணி, நாகரிகமான தொழில், வாணிகம் ஆகியவை கனவிலும் அவர்கள் கருத முடியாதவையாகி உயர்சாதியாரின் வல்லாண்மைப் பீடங்களாக இருந்து வந்துள்ளன.

தொட்டால், பார்த்தால், நிழல் பட்டால், குரலைக் கேட்-கேட்டால் தீட்டு என்ற கொடுமை தலை விரித்து ஆட்டம் போட்-டுள்ளது.

பள்ளி வகுப்பறையில் தனியே ஒரு மூலையில் உட்காருவ-தற்குக் கோணி கொண்டு வரல் வேண்டும். குறிப்புப் பொத்தகங்-களைத் தொடுவதும் திருத்துவதும் பாடம் ஒப்புவிக்கும் போது, கேட்பதும் அடாத செயல்களாக அப்போது இருந்தன. இது யாருக்கோ அன்று. அம்பேத்கருக்கே இந்த நிலை!

இன்னும் இந்தக் கொடுமைகளை விரிவாக எழுதினால் நெஞ்சில் அரத்தம் வடியும்.

அண்ணல் அம்பேத்கர் புகழுரு எய்தியபோது சிறந்த நிலை: 1956 டிசம்பர் 6ஆம் நாள் அண்ணல் அம்பேத்கர் புகழுரு எய்தியபோது அவர் அறிவால், ஆற்றலால், உழைப்பால், தொண்டால், பேச்சால், எழுத்தால், போராட்டங்களால் குமுகாயத்தின் இழிநிலை பெரும் பகுதி மாற்றம் பெற்றுவிட்டது. இப்படிப்பட்ட மாற்றங்களுக்கு மாமகர் அம்பேத்கர் பட்ட பாட்டை நாம் நினைத்துப் பார்ப்பது இன்றியமையாதது ஆகும்.

வீடன்று; நூலகம்! வீட்டிற்கு ஒரு பொத்தக சாலை அமைத்துக் கொண்டால் நாட்டுக்கு நல்ல நிலை ஏற்படும் என்று அறிஞர் அண்ணா கூறியுள்ளார். அதை அண்ணல் அம்பேத்கர் முன்னரே செயலில் காட்டியுள்ளார்.

தனி மாந்தர்கள் தங்கள் சொந்தப் பயன் பாட்டுக்காக வைத்திருந்த நூல் நிலையங்களில் அம்பேத்கருடையதுதான் ஆசியாவிலேயே மிகப் பெரியதாகும். அவருடைய இல்லத்தை நூல் நிலையம் என்றுதான் குறிப்பிட வேண்டும். "என்னைப் போன்ற குமுகாயத்தில் தவிர்க்கப்பட்டவருக்குப் பொத்தகங்-களே சீரிய நண்பர்கள்" என்று சொன்ன அம்பேத்கர் படித்துக் கொண்டிருக்கும் போதே இயற்கை எய்தினார் என்பது அவரின் படிப்பார்வத்திற்கு இறுதிச் சான்றாக இருக்கிறது.

பிறநாடு போற்றும் அண்ணல் : இலண்டன் நூலகத்தில் இருவர் படங்களே உள்ளன: ஒன்று காரல்மார்க்சு; மற்றது அண்ணல் அம்பேத்கர். காரணம் என்ன? இந்த நூலகத்தில் அதிகப் புத்தகங்களைப் படித்தவர்கள் இந்த இருவர் மட்டுமே ஆகும்.

மூன்றின் அருமை : கபீர், சோதிபாபுலே, புத்தர் ஆகிய மூன்று பெருமக்களைத் நமது வழிகாட்டியாகக் கொண்டுள்ளார்.

மக்கள் கல்விச் சங்கம், இந்திய புத்த சங்கம், இந்தியக் குடியரசுக்கட்சி ஆகிய மூன்று நிறுவனங்கள் மூலம் தமது தொண்டைச் செய்துள்ளார்.

கற்பி, புரட்சி செய், ஒன்று சேர் ஆகிய மூன்று கட்டளைகளைக் குமுகாயத்தின் உரிமைகளைப் பெறுவதற்குக் கருவியாகக் கொண்டுள்ளார்.

தூக்கமும் விழிப்பும் : நாடு உரிமை அடைந்த பின் ஒரு நாள் நள்ளிரவு தில்லியில் வெளிநாட்டுச் செய்தியாளர் அண்ணல் அம்பேத்கரைச் சந்திக்க வந்தார். அப்போது அம்பேத்கர் படித்துக் கொண்டிருந்தார். "காந்தி, நேரு இருவரையும் சந்திக்கச் சென்றோம். அவர்கள் தூங்கப் போய் விட்டார்கள். நீங்கள் இந்த நள்ளிரவிலும் படித்துக் கொண்டிருக்கிறீர்களே" என்று செய்தியாளர் வியந்து கேட்டார்.

"அவர்கள் இனம் விழித்துக் கொண்டிருக்கிறது; ஆகவே அவர்கள் தூங்கப் போய் விட்டார்கள். என்னுடைய இனம் தூங்கிக் கொண்டிருக்கிறது; எனவே, நான் விழித்துக் கொண்டிருக்கிறேன்" என்று விடை கூறினார்.

இதை நமது ஒடுக்கப்பட்ட இன மக்கள் நினைந்து உணர்ந்து பின்பற்றல் வேண்டும்.

கொள்கையே பெரிது : சட்ட அமைச்சராக அண்ணல் அம்பேத்கர் இருந்த போது இந்து சட்ட வரைவு (மசோதா) கொண்டு வந்தார். இது அவர் விரும்பியபடி நாடாளுமன்றத்தில் நிறைவேறிச் சட்டமாகி இருந்தால், இந்து குமுகாயத்தில் புரட்சியான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கும்.

ஆனால் சட்ட வரைவை (மசோதாவை) பழமையுணர்வாளர்கள் (சனாதனவாதிகள்) எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர். சர்தார் படேலும் இராசேந்திர பிரசாத்தும் எதிர்த்தனர். இது தொடர்பாக அமைச்சரவையில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாகத் தமது சட்ட அமைச்சர் பதவியை அம்பேத்கர் விட்டு விலகினார்.

கொள்கையா, பதவியா என்ற போராட்டம் வந்தபோது கொள்கையே பெரிது என்று பதவியைத் தூக்கி எறிந்தவர், அவர்.

புத்த மதம் விரும்பிய சித்தர் : 'இந்துவாகப் பிறந்துவிட்ட நான் இந்துவாக இறக்கமாட்டேன்' என்று சொன்னார். 14—10—1956-ஆம் நாள் மூன்று இலக்கம் பேர்களுடன் புத்த மதத்தில் சேர்ந்தார்.

அம்பேத்கரும் பெரியாரும் இன முன்னேற்ற நாணயத்தின் இரு பக்கங்கள் : அண்ணல் அம்பேத்கரின் கொள்கையைத் தென்னாட்டில் முதன் முதலில் பரப்பியது தன்மதிப்பு (சுயமரியாதை) இயக்கமும் அதன் தலைவர் தந்தை பெரியாருமே ஆகும்.

புத்தருக்குப் பிறகு அறிவுப் புரட்சியை வடநாட்டில் அண்ணல் அம்பேத்கரும், தென்னாட்டில் தந்தை பெரியாரும் செய்தார்கள். இவர்கள் இருவரும் இன முன்னேற்றம் என்னும் நாணயத்தின் இரு பக்கங்களாகவே இருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்டவர்களும் பிற்படுத்தப்பட்டவர்களும் அம்பேத்கர், பெரியார் இருவரின் கொள்கைகளையும் பின்பற்றி நடந்தால்தான் அவர்கள் நாணயம் செல்லும். இல்லாவிட்டால் செல்லாக் காசு ஆகிவிடுவார்கள்.

தமிழ்நாடு அரசு : தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் இந்த மண்ணையும் மக்களையும் பகுத்தறிவு நெறியில் பண்படுத்தி வைத்திருப்பதால்தான், அண்ணல் அம்பேத்கருக்கு இங்கு எந்தச் சிறப்புச் செய்தாலும் யார் செய்தாலும் எதிர்ப்பே இல்லை என்பதோடு பாராட்டும் கிடைக்கிறது.

கலைஞர் கருணாநிதி முதல் அமைச்சராக இருந்த போது 1974-இல் தமிழ்நாடு அரசு வடசென்னையில் அம்பேத்கர் பெயரில் அரசினர் கலைக்கல்லூரி நிறுவியது. திருவல்லிக்கேணியில் உள்ள ஆமில்டன் பாலத்தின் பெயரை அம்பேத்கர் பாலம் என்று மாற்றியது. சென்னையில் பல இடங்களில் அம்பேத்கர் சிலை அமைத்தது.

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். முதல் அமைச்சராக இருந்த போது 1980 ஆகத்து மாதத்தில் சட்டமன்றப் பேரவையில் அம்பேத்கர் திருவுருவப்படம் திறந்து வைக்கப்பட்டது.

அம்பேத்கர் நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இந்த ஆண்டில் தமிழ்நாடு அரசின் சார்பாகத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் வடஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதிக்கு அம்பேத்கர் மாவட்டம் என்று பெயர் சூட்டினார்.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் அம்பேத்கர் பெயரில் மாவட்டம் அமைக்கப்படவில்லை என்பது மட்டும் அன்று, அவர் பிறந்த மண்ணிலேயே மரத்வாடா பல்கலைக் கழகத்தின் பெயரை அம்பேத்கர் பல்கலைக்கழகம் என்று மாற்றுவதற்கு மராட்டிய சட்ட மன்றம் ஒரு மனமாக முடிவு செய்தும் உயர் சாதிக்காரர்களின் வல்லாண்மையால் நடைமுறைப் படுத்த முடியவில்லை என்பது எண்ணிப்பார்க்கத்தக்கது.

சென்னையில் உள்ள சட்டக் கல்லூரியின் பெயர் அம்பேத்கர் சட்டக்கல்லூரி என்றும் பெயர் மாற்றப் பட்டுள்ளது.

அம்பேத்கர் உருவம் பதிக்கப்பட்ட நாணயம் வெளியிட வேண்டும் என்றும், அவர் உருவம் பொறித்த அஞ்சல் தலை எல்லா மாநிலத் தலை நகரங்களிலும் ஒரே சமயத்தில் வெளியிடப்-

படவேண்டும் என்றும், சென்னை பம்பாய் செல்லும் தாதர் எக்சு பிரசு தொடர் வண்டியின் பெயரை அம்பேத்கர் விரைவுவண்டி (எக்சுபிரசு) என்று மாற்ற வேண்டும் எனவும் மத்திய அரசுக்கு தமிழ்நாடு அரசு கோரிக்கை வைத்துள்ளது.

நடுவண் அரசு : பேராயக் கட்சி நடுவில் ஆட்சி செய்த போது அம்பேத்கரை நினைவு கூரும் வகையில் அவரது திருவுருவம் பொறித்த அஞ்சல் தலைகளை இருமுறை வெளியிட்டுள்ளது.

தேசிய முன்னணி அரசின் தலைமையமைச்சராக திரு. வி. பி.- சிங் இருந்த போது அம்பேத்கரின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பிக்கும் வகையில் நடுவண் அரசு அவரது பிறந்த நாளை (14—4—90) அரசு விடுமுறை நாளாக அறிவித்துள்ளது.

தேசிய முன்னணி ஆட்சி அம்பேத்கரின் திருவுருவப்படத்தை 12—4—90ஆம் நாள் நாடாளுமன்றத்தில் திறந்து வைத்துள்ளது. இந்திய அரசியல் அமைப்பினை வடித்துத் தந்த சிற்பியின் படத்தைத் திறப்பதற்குக் கூட 42 ஆண்டுகள் தேவைப்பட்டுள்ளன என்பது நடுவண் அரசு உயர் சாதிக்காரர்களின் ஆளுமையில் இருப்பதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

மேலும் பாரத ரத்ன விருது வழங்கி அவரது மறைவுக்குப் பிறகு அவரைச் சிறப்பித்துள்ளது, நடுவண் அரசு! அத்துடன், அவரது நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்த ஆண்டைக் குமுக நெறி (நீதி) ஆண்டாக (1990) அறிவித்துள்ளது;

அறிவுக் கருவிகளை உருவாக்குவோம்!
அம்பேத்கரின் பணியை நிறைவாக்குவோம்!!

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள்!

இந்தியாவிற்கு வெளிநாட்டுச் செலாவணி கணிசமாகப் பெற்றுத்தரும் வெளிநாடுகளில் பணிபுரியும் இந்தியர்களின் விளத்தம்:

அமெரிக்கா	1,94 000
இங்கிலாந்து	3,80,000
ஆத்திரேலியா	33,000
கனடா	1,10,000
மேற்கு செருமனி	75,000
மேற்கு ஆசிய நாடுகள்	9,50.000
மலேசியா	3,50,000
சிங்கப்பூர்	51,000
ஆங்காங்	12.000
நைசீரியா	20,000

அதிகபக்கமாக வெளிநாடுகளில் பணிசெய்பவர்கள் மேற்கு ஆசிய நாடுகளில்தாம் உள்ளனர். இப்போது வளைகுடாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடியினால் மேற்கு ஆசியாவிலிருந்து இந்தியர்கள் திரும்பி வந்தால் அவர்களுக்கு இந்திய அரசால் வேலை கொடுக்க முடியாது. அதோடு அவர்கள் மூலமாய்க் கிடைத்து வந்த வெளிநாட்டுச் செலாவணியும் நின்று போகும்.

—சல்மான்—

புத்தரும் புலால் உணவும்!

புத்தருக்குச் செல்வர் பலரும் அரசர் பலரும் சிறந்த வணிகர்கள் பலரும் நண்பர்களாகவும் அவர் தம் அடியார்களாகவும் இருந்துள்ளனர். இவர்கள் அடிக்கடி புத்தருக்கு நல்விருந்திட்டு மகிழ்வளித்துள்ளனர் என்பது வரலாறு. அந்த விருந்துகள் அனைத்திலும் புலால் உணவு முகாமையான இடம் பெற்றிருந்தது என்பது வரலாற்றுரை.

புத்தர் புலால் உண்ண இசைவளித்திருந்தாலும் கூட இன்ன புலாலை உண்ணலாம், இன்ன புலாலை உண்ணக் கூடாது என்று பகுத்துத் திட்டமிட்டு உரைத்தாரில்லை. செத்த உயிரினங்களின் புலாலை உண்ணக்கூடாது என்று தடுத்தாரில்லை.

புத்தர் தமது எண்பதாவது அகவையில் பல நகரங்களுக்கும், சிற்றூர்களுக்கும் செலவு (பயணம்) செய்து இறுதியாக பாவா நகரத்துக்கு வந்தார். இதை இன்று வாரணாசி என்று அழைக்கின்றனர். அங்கு, அவர் சுந்தன் என்ற கொல்லனுடைய மாந்தோப்பில் தங்கியிருந்தார் என்பர். அக்கால் அந்த சுந்தன் அளித்த பன்றி இறைச்சியை இறுதியாக புத்தர் உண்டார். அதன்பின் உயிர் நீத்தார் என்பது வரலாறு.

இந்தப் பன்றியை சுகரமத்தவம் என்பர். சுகரமத்தவம் என்பது கிழடோ வாலிபமோ அல்லாத முதிர்ந்த கொழுத்த பன்றிக்குட்டியைக் குறிக்கும் சொல்லாகும் என்பர். இதன்படி பார்த்தால் உயிருடன் உள்ள நல்ல பன்றிக்குட்டியைக் கொன்று சுவைபடச் சமைத்து அன்புடன் புத்தருக்கு சுந்தன் வழங்கினான் என்றாகும். ஆக, கொல்லாமை பேசிய புத்தர் கூட தமக்குத் தெரிந்தோ, தெரியாமலோ உயிருடனுள்ள பன்றிக் குட்டியைக் கொன்று சமைத்துத் தரப்பட்டதை உண்டபின் இறந்தார் எனக் கொள்வது பிழையாகாது. ஆக, கொல்லாமை நெறியிலும் புத்தர் நின்றாரா நின்று நிலைத்தாரா என்பது ஐயத்திற்குரியதே!

சேற்றிலே பூத்த செந்தாமரைகள்!

அடிமையை ஒழித்த ''ஆபிரகாம் இலிங்கன்'' விறகு வெட்டி மகன்.
ஆற்றல் மிகு டீசலைக் கண்டறிந்த ''டீசல்'' கொல்லரின் மகன்.
இத்தாலிய செயல்வீரர் 'கரிபால்டி' மீனவரின் மகன்.
ஈடில்லாப் புதினங்கள் படைத்த 'எச்.சி.வெல்சு' பெட்டிக் கடைக்காரர் மகன்.
உலகம் புகழும் பாவலர் 'பைரன்' இரவுக் காவலரின் மகன்.
ஊக்கமிகு கருத்துகள் வழங்கிய 'இசுடாலின்' செருப்புத் தைப்பவர் மகன்.
எழுத்தாளர் பிரெஞ்சு நாட்டு 'பால்சாக்' உழவரின் மகன்.
ஏழ்மையிலிருந்த துருக்கியரை ஏற்றம் காணச் செய்த 'கமால்-அட்டாடர்க்' கடற்கரைப்பணியாளர் ஒருவரின் மகன்.
'ஐக்கிய' அமெரிக்க அறிஞர் 'பெஞ்சமின் பிராங்க்ளின்' மெழுகுத்திரி விற்பனையாளர் மகன்.
ஒப்பற்ற காப்பு விளக்கைக் கண்ட 'அம்ரிடேவி' தச்சரின் மகன்.
ஓம் என்னும் அலகினைக் கண்டறிந்த 'ஓம்' பூட்டு செய்பவர் மகன்.

தொகுப்பு : ச. சி. டேனியல். நன்றி : அரும்பு, '90 அக்.

- இந்தியாவில் இக்கால் குழந்தைத் தொழிலாளர்கள் மொத்தம் 4 கோடியே 40 இலக்கம் பேர் இருக்கிறார்கள்; இவர்களில் 30 விழுக்காட்டினர் (1 கோடியே 32 இலக்கம் பேர்) சிறுமிகள். இவர்கள் மிகவும் கொடுமையான உயிருக்கு ஏதமான (ஆபத்தான) தொழில்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர். போதை மருந்து கடத்தல்களுக்கும் இவர்கள் பயன்படுத்தப் படுகின்றனர். தில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய நான்கு நகரங்களில் மட்டும் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் இத் தொழிலில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். போதை மருந்து கடத்துவதிலேயே இந்தியாவில் தமிழ்நாடு தான் முதலிடம் பெற்றுள்ளதாகப் புள்ளி விளக்கங்கள் கூறுகின்றன. இரண்டாவது நகரம் தில்லி.

  வைரம் பட்டைதீட்டுதல், பித்தளை ஏனங்களுக்கு மெருகு ஏற்றுதல், பூட்டுகள் செய்தல், தரை விரிப்புகள் அணியப்படுத்துதல் முதலிய தொழில்களில் ஈடுபடுத்தப்படும் குழந்தைத் தொழிலாளர்களுக்கு விரைவிலேயே காது கேளாமல் போய் விடுகிறதாம்.

- திருமணம் ஆகாமலேயே தாயாகும் பெண்களின் நிலைபற்றி அண்மையில் பம்பாயில் ஒரு புள்ளி விளக்கம் எடுக்கப் பெற்றதில் அவ்வாறான பெண்களில் 70 விழுக்காட்டினர் நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்தது. சென்னையில் உள்ள மருத்துவ மனைகளில் உள்ள குறிப்பின்படி 1990-இல் திருமணம் ஆகாமல் கருவுற்ற பெண்கள் 160 பேர் கருச்சிதைவு அறுவை செய்யப் பெற்றுள்ளனர் என்றும், இவர்களில் பெரும்பாலோர் 16 அகவை முதல் 19 அகவை வரையிலுள்ள பள்ளிகளில் படிக்கும் பெண்கள் என்றும் ஒரு செய்தி கூறுகிறது.

- இந்தியாவில் தீண்டப் படாத மக்கள் என்று சட்டப்படி 429 குமுகாயத்தினரை ஒதுக்கி வைத்துள்ளனர்.

- வடக்கே தலை வைத்துப் படுக்கக் கூடாது என்று சொல்லுகிறோம். அவ்வாறு படுத்தால், மாந்தனின் காந்தப் புலன் ஆற்றல் குறைகிறது என்றும் மூளையில் குருதி ஓட்டம் குறைந்து விடும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

- உலக உணவு, வேளாண்மைக் கழகத்தின் மதிப்பீட்டின்படி, உலகில் இன்றைய நிலையில், உள்ள மக்களில் அரிசி உணவை 56 விழுக்காட்டினரும், கோதுமை உணவை 16 விழுக்காட்டினரும், மக்காச் சோளத்தை 5 விழுக்காட்டினரும், சோளம், கம்பு, கேழ்வரகு, ஓட்சு, ரை, பார்லி ஆகியவற்றை 4 விழுக்காட்டினரும், மீன், இறைச்சி உணவை 14 விழுக்காட்டினரும், கிழங்கு வகைகளை 2 விழுக்காட்டினரும் முழு உணவாகக் கொள்கின்றனர் என்று தெரியவருகிறது.

- யாழ்ப்பாணத்தில் வேளிர், அல்லது வேளார் என்று குறிப்பிடப் பெறும் குறுநில மன்னர்கள் கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலேயே இருந்தனர் என்பதற்கான தடயம் பூநகரி என்னும் பகுதியில் உள்ள வெட்டுக்காடு, பரமன்கிராய் என்னும் ஊர்களில் இவ்வாண்டு சூன் மாதம் கிடைத்த மட்பாண்டங்களில் இருந்து தெரியவருகிறது. இம் மட்பாண்டங்களில் தமிழ்—பிராமி எழுத்துகளில் 'வேளான்' என்று எழுதப் பெற்றுள்ளது.

- தமிழகத்தில் ஏறத்தாழ 2000 திரைப்படக் கொட்டைகைகள் இருக்கின்றன.

தமிழ் நாள் காட்டி!

திருவள்ளுவர் ஆண்டு 2022 — ஆங்கில ஆண்டு 1991

கிழமை	சுறவம் (தை) சனவரி - பிப்ரவரி					கும்பம் (மாசி) பிப்ரவரி - மார்ச்சு				
ஞாயிறு		7_{20}	14_{27}	21_{3}	28_{10}		5_{17}	12_{24}	19_{3}	26_{10}
திங்கள்	1_{14}	8_{21}	15_{28}	22_{4}	29_{11}		6_{18}	13_{25}	20_{4}	27_{11}
செவ்வாய்	2_{15}	9_{22}	16_{29}	23_{5}	30_{12}		7_{19}	14_{26}	21_{5}	28_{12}
அறிவன்	3_{16}	10_{23}	17_{30}	24_{6}		1_{13}	8_{20}	15_{27}	22_{6}	29_{13}
வியாழன்	4_{17}	11_{24}	18_{31}	25_{7}		2_{14}	9_{21}	16_{28}	23_{7}	30_{14}
வெள்ளி	5_{18}	12_{25}	19_{1}	26_{8}		3_{15}	10_{22}	17_{1}	24_{8}	
காரி	6_{19}	13_{26}	20_{2}	27_{9}		4_{16}	11_{23}	18_{2}	25_{9}	

கிழமை	மீனம் (பங்குனி) மார்ச்சு - ஏப்ரல்					மேழம் (சித்திரை) ஏப்ரல் - மே				
ஞாயிறு		3_{17}	10_{24}	17_{31}	24_{7}	1_{14}	8_{21}	15_{28}	22_{5}	29_{12}
திங்கள்		4_{18}	11_{25}	18_{1}	25_{8}	2_{15}	9_{22}	16_{29}	23_{6}	30_{13}
செவ்வாய்		5_{19}	12_{26}	19_{2}	26_{9}	3_{16}	10_{23}	17_{30}	24_{7}	31_{14}
அறிவன்		6_{20}	13_{27}	20_{3}	27_{10}	4_{17}	11_{24}	18_{1}	25_{8}	
வியாழன்		7_{21}	14_{28}	21_{4}	28_{11}	5_{18}	12_{25}	19_{2}	26_{9}	
வெள்ளி	1_{15}	8_{22}	15_{29}	22_{5}	29_{12}	6_{19}	13_{26}	20_{3}	27_{10}	
காரி	2_{16}	9_{23}	16_{30}	23_{6}	30_{13}	7_{20}	14_{27}	[illegible] $_{4}$	28_{11}	

கிழமை	விடை (வைகாசி) மே - சூன்					ஆடவை (ஆனி) சூன் - சூலை				
ஞாயிறு		5_{19}	12_{26}	19_{2}	26_{9}	30_{14}	2_{16}	9_{23}	16_{30}	23_{7}
திங்கள்		6_{20}	13_{27}	20_{3}	27_{10}	31_{15}	3_{17}	10_{24}	17_{1}	24_{8}
செவ்வாய்		7_{21}	14_{28}	21_{4}	28_{11}	32_{16}	4_{18}	11_{25}	18_{2}	25_{9}
அறிவன்	1_{15}	8_{22}	15_{29}	22_{5}	29_{12}		5_{19}	12_{26}	19_{3}	26_{10}
வியாழன்	2_{16}	9_{23}	16_{30}	23_{6}	30_{13}		6_{20}	13_{27}	20_{4}	27_{11}
வெள்ளி	3_{17}	10_{24}	17_{31}	24_{7}	31_{14}		7_{21}	14_{28}	21_{5}	28_{12}
காரி	4_{18}	11_{25}	18_{1}	25_{8}		1_{15}	8_{22}	15_{29}	22_{6}	29_{13}

	கடகம் (ஆடி) சூலை - ஆகஃச்டு					மடங்கல் (ஆவணி) ஆகஃச்டு - செப்டம்பர்				
		5_{21}	12_{28}	19_{4}	26_{11}	30_{15}	2_{18}	9_{25}	16_{1}	23_{8}
		6_{22}	13_{29}	20_{5}	27_{12}	31_{16}	3_{19}	10_{26}	17_{2}	24_{9}
		7_{23}	14_{30}	21_{6}	28_{13}		4_{20}	11_{27}	18_{3}	25_{10}
	1_{17}	8_{24}	15_{31}	22_{7}	29_{14}		5_{21}	12_{28}	19_{4}	26_{11}
	2_{18}	9_{25}	16_{1}	23_{8}	30_{15}		6_{22}	13_{29}	20_{5}	27_{12}
	3_{19}	10_{26}	17_{2}	24_{9}	31_{16}		7_{23}	14_{30}	21_{6}	28_{13}
	4_{20}	11_{27}	18_{3}	25_{10}		1_{17}	8_{24}	15_{31}	22_{7}	29_{14}

	கன்னி (புரட்டாசி) செப்டம்பர் - அக்டோபர்					துலாம் (ஐப்பசி) அக்டோபர் - நவம்பர்				
		6_{22}	13_{29}	20_{6}	27_{13}		3_{20}	10_{27}	17_{3}	24_{10}
		7_{23}	14_{30}	21_{7}	28_{14}		4_{21}	11_{28}	18_{4}	25_{11}
	1_{17}	8_{24}	15_{1}	22_{8}	29_{15}		5_{22}	12_{29}	19_{5}	26_{12}
	2_{18}	9_{25}	16_{2}	23_{9}	30_{16}		6_{23}	13_{30}	20_{6}	27_{13}
	3_{19}	10_{26}	17_{3}	24_{10}	31_{17}		7_{24}	14_{31}	21_{7}	28_{14}
	4_{20}	11_{27}	18_{4}	25_{11}		1_{18}	8_{25}	15_{1}	22_{8}	29_{15}
	5_{21}	12_{28}	19_{5}	26_{12}		2_{19}	9_{26}	16_{2}	23_{9}	30_{16}

	நளி (கார்த்திகை) நவம்பர் - டிசம்பர்					சிலை (மார்கழி) டிசம்பர் - சனவரி 1992				
	1_{17}	8_{24}	15_{1}	22_{8}	29_{15}		7_{22}	14_{29}	21_{5}	28_{12}
	2_{18}	9_{25}	16_{2}	23_{9}		1_{16}	8_{23}	15_{30}	22_{6}	29_{13}
	3_{19}	10_{26}	17_{3}	24_{10}		2_{17}	9_{24}	16_{31}	23_{7}	30_{14}
	4_{20}	11_{27}	18_{4}	25_{11}		3_{18}	10_{25}	17_{1}	24_{8}	
	5_{21}	12_{28}	19_{5}	26_{12}		4_{19}	11_{26}	18_{2}	25_{9}	
	6_{22}	13_{29}	20_{6}	27_{13}		5_{20}	12_{27}	19_{3}	26_{10}	
	7_{23}	14_{30}	21_{7}	28_{14}		6_{21}	13_{28}	20_{4}	27_{11}	

நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாளது உணர்வார்ப் பெறின். - திருக்குறள்

நன்றி: வ. வேம்பையன், கல்பாக்கம்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை 600 005. (தமிழகம்)